
# நினைவின் சாரல்!

**அகவை அறுபது 11-07-2021**



**மு.ஜெயசங்கர்,**
**உதவி ஆணையர்,**
**சுங்க இல்லம், சென்னை.**

நேரிய நெஞ்சின் நினைவுகள் கொண்டு,
நின்றதாம் அன்பின் நினைவில் தோய்ந்து,
சென்றதாம் காலம் செருக்குடன் சொல்லும்,
சிந்திய நட்பின் சீரியக் கதைகள் நாளும்!

-வேறு-

சென்னைதான் வாழ்க்கை யென்று,
சேர்ந்ததோ சுங்கஇல்லம்!
மன்னிய நட்பும் எங்கள்
மருவிலாக் காலம் சொல்லும்!
மின்னிய விமானச் சரக்ககம்
மீட்டிய உறவின் கொற்றம்!
மன்னிய அன்பில் திளைந்து
**பாஷா**வுடன் படர்ந்து நின்றோம்!

-வேறு-

திக்குதிசையென்றுத் தேடாமல் நடந்திடுவோம்!
பக்குவமாய்ச் சிந்தை கொள்ளும் பலகதைகள்!
திக்கிலே சிலகாலம் திரையரங்கும் வந்து போகும்!
அக்கரை கொண்டும் சிலநாள் கோயில் குளமாகும்!
எக்கரை அடைவோம் என்றோர் இலக்குண்டோ?
சீக்கிரம் வீடு செல்லும் சிந்தையே முடிவில் வெல்லும்!
மின்னிடும் நினைவுகள் மனத்தில் முகிழும்தானே!



-வேறு-

நாடியதாம் நட்பின் கேள்வன்
நல்லசீர் அன்பின் தோழன்
பாடியதால் தமிழைப் பேணும்
பயின்ற அறிவின் மன்னன்
நாடிநான் சுங்க இல்லம்
நடைகொள்ள வந்த போது,
சூடிய உறவின் சீலன்
***சங்கரன் கோயில்*** முத்து!

**முத்துசாமி** ஈன்ற பிள்ளை
முறுவலில் அன்பைச் சொல்லும்
இத்தரை எங்கும் காணா,
இனியனாம் எங்கள் நண்பன்!
சித்திரை நிலவாய்ப் பலரைச்
சிந்தையில் மயக்கும் தீரன்!
முத்திரைப் பதித்தான் ஆண்டுகள்
**முப்பத்தி எட்டு** தனையே!



சுங்கத்தின் சுவர்கள் கூட; அவன்
சொல்கேட்டு மயங்குதல் உண்டு!
தங்கமாய் பலரின் நினைவில்,
தயங்காமல் வாழ்ந்திடுவான்!
சுங்கத்தின் பெயரைத் தமிழில்,
செதுக்கிடச் செய்தான் அவனே!
எங்களின் தோழன் என்னும்
இறுமாப்பு அதனில் உண்டு!



எதிர் கேள்வி என்பதே அவன்
இயன்நிலை யாகும் கண்டீர்!
மதிசூடி நம்மை யெல்லாம்,
மறுபடியும் பேச வைப்பான்!
விதியென்று மனத்தில் என்றும்
வேதனை கொள்வானில்லை!
கதியென்ற உலகின் போக்கில்,
கடியாரம் அவனே செய்வான்!



கண்ணிரண்டாய் மகள்கள் இருவர்,
கனிவுடனே பெற்று வளர்க்க,
மண்பதை போற்றும் சீராய்,
மகிழ்வுடன் மணவாழ்வு சூட,
கண்களாய்த் தானும் மகவிரண்டைக்
கொண்டாள் **பவித்திரா!**
வண்ணமாய் இளையவள் **நிவேதிதா,**
வார்த்ததோ ஓர்ஆண் சிங்கம்!

-வேறு-

அன்னவன் இல்லத்தரசி, அளவிலா அன்பைச் சூட,
தென்னவன் எனவே தானும் திகழ்ந்தான் அன்றோ!
இன்றவன் கண்டதாம் **அகவை அறுபது**தானே!
மன்னிய சீர் அன்பில் மகிழ்ந்து வாழ்த்துவேனே!
இன்னும் பலகாலம் இனிமையாய் வாழ்ந்திருந்து,
பொன்னெனப் பெயரன் பெயர்த்திச் சூழ அன்பில்,
என்னாளும் நிறைவாய் வாழ வாழ்த்துவேனே!



இளநிலை உதவியாளன் என்றேப் பணியைத் தொடங்கி,
தளமெனப் படியாய் உயர்ந்து, உதவி ஆணையராய்,
களம்கண்ட நண்பனுக்கு கர்வமாய் வாழ்த்துச் சொன்னேன்!

**அன்புடன்,**

**து.ப. அசோகன்**

**08-07-2021**



